தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387
ANANDA BHASKAR
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
www.anandabhaskar.com





சென்னை மலர்: 01 இதழ்: 130 06.11.2025 வியாழக்கிழமை
Chennai Volume: 01 Issue: 130 Thursday pages 4 Rs.5/-

## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(06-11-2025)
விசுவாவசு ஆண்டு, ஐப்பசி-20
பிறை: தேய்பிறை
திதி: பிரதமை மாலை 5.08 வரை பிறகு துவிதியை
நட்சத்திரம்:
பரணி கதைல 8.39 வரை பிறகு கார்த்திகை
யோகம்
சித்த, மரணயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30-3.00 மணி
எமகண்டம்
காலை 6.00-7.30 மணி.
சூலம்
தெற்கு.
நல்ல நேரம் :
காலை 9-10 மணி.
மாலை 4-5 மணி.


| | |
|---|---|
| மேஷம் .................. | வரவு |
| ரிஷபம் .................. | தாமதம் |
| மிதுனம் .................. | ஜெயம் |
| கடகம் .................. | ஆதரவு |
| சிம்மம் .................. | நற்சொல் |
| கன்னி .................. | மாற்றம் |
| துலாம் .................. | கவனம் |
| விருச்சிகம் .............. | திடம் |
| தனுசு .................. | சிந்தனை |
| மகரம் .................. | யோகம் |
| கும்பம் .................. | அமைதி |
| மீனம் .................. | சுபம் |

# ராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.06: தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின், இன்று (5.11.2025) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், வேலூரில் ரூ.32 கோடி செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்காவினை திறந்து வைத்தார். மேலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் ரூ.37 கோடி மதிப்பீட்டில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.

2000-ஆம் ஆண்டில் கலைஞர் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை, தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது.



'அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி' என்ற தமிழ்நாடு அரசின் முக்கிய கொள்கையின்படி, தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 லட்சம் சதுரடி கட்டுமான பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 லட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்களை நிறுவ முதல்-அமைச்சரால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இவற்றின் கட்டுமானப்பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் நடைபெற்று வருகின்றன. மேலும், 5.57 லட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவில், 21 தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, முதல்-அமைச்சரால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. ஓசூரில் ரூ.400 கோடி செலவில் 5 லட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இவை மட்டுமின்றி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும், டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, விழுப்புரம், திருப்பூர், வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினால் அடிக்கல் நாட்டப்பட்டு, அவற்றில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்ற, விழுப்புரம் மினி டைடல் பூங்கா 17.02.2024 அன்றும், தஞ்சாவூர் மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் 23.09.2024 அன்றும், தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 29.12.2024 அன்றும், திருப்பூர் மினி டைடல் பூங்கா 11.08.2025 அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டன.

# த.வெ.க. முதல்-அமைச்சர் வேட்பாளராக விஜய் தேர்வு

## சிறப்பு பொதுக்குழுவில் தீர்மானம்






சென்னை, நவ.06: கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து அவர் மீது அரசியல் கட்சிகள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தன. தொடர்ந்து மவுனம் சாதித்து வந்த விஜய், கரூர் சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்து வீடியோ வெளியிட்டார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.20 லட்சம் நிவாரணம் வழங்கியதோடு, அவர்களை மாமல்லபுரத்திற்கு நேரில் அழைத்து தனித்தனியாக சந்தித்து ஆறுதல் கூறினார். இதன்பின்னர் த.வெ.க. அன்றாட அரசியல் நிகழ்வுகளில் கவனம் செலுத்தியது. கட்சியின் அன்றாடப்பணிகளை மேற்கொள்ள பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் உள்பட 28 பேர் கொண்ட நிர்வாகக்குழுவை விஜய் நியமித்தார்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் த.வெ.க.வின் அடுத்த கட்ட நடவடிக்கை, சட்டமன்ற தேர்தலுக்கான வியூகங்கள் வகுப்பதற்காக சிறப்பு பொதுக்குழு கூட்டம் அக்கட்சியின் தலைவர் விஜய் தலைமையில் மாமல்லபுரத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் சுமார் 2 ஆயிரம் பேர் பங்கேற்றுள்ளனர். முதலாவதாக கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் அக்கட்சியின் கொள்கை தலைவர்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து 12 தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. அதில் முக்கியமாக 2026 தேர்தலில் கூட்டணி உள்ளிட்ட அனைத்து முடிவுகளையும் எடுக்க விஜய்க்கு அதிகாரம் வழங்கியும், முதல்-அமைச்சர் வேட்பாளராக விஜய்யை அறிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தவெகவை தங்கள் கூட்டணியில் சேர்க்க வேண்டும் என அதிமுக, பாஜக கட்சிகள் தொடர் முயற்சி எடுத்து வந்த நிலையில், அந்த அழைப்பை தற்போது தவெக நிராகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கரூர் சம்பவத்துக்கு பிறகு விஜய் பொதுவெளியில் நிகழ்ச்சிகளில் எதுவும் பங்கேற்காமல் இருந்தார். எனவே அந்த சம்பவத்திற்கு பிறகு நடைபெறும் பொதுக்குழு கூட்டம் என்பதால் அரசியல் வட்டாரத்தில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது.

பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளநிலையில் விஜய் சிறப்புரையாற்ற இருக்கிறார்.

# 2026 சட்டசபை தேர்தல்; நிர்வாகிகளுக்கு எடப்பாடி ஆலோசனை



சென்னை, நவ.06: அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் மற்றும் சட்டசபையின் எதிர்க்கட்சி தலைவர், தமிழ்நாடு முன்னாள் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமை கழகத்தின் எம்.ஜி.ஆர். மாளிகையில் இன்று மாவட்ட கழக செயலாளர்கள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அவர், கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களில், பூத் (பாகம்) கிளை கழகங்களை சேர்ந்த நிர்வாகிகள் அனைவரையும் ஆன்லைனில் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவது குறித்த விபரங்களை மாவட்ட கழக செயலாளர்களிடம் முழுமையாக கேட்டறிந்து, இப்பணியினை விரைந்து முடிக்குமாறு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து அவர், 1.1.2026-ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக்கொண்டு, தமிழ்நாடு முழுவதும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இது மிகவும் முக்கியமான பணி என்பதாலும், வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரிசெய்வதற்கு இது சரியான தருணம் என்பதாலும் இதில் தனி கவனம் செலுத்தி, சரியான வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகளைமேற்கொண்டு, அதன் விபரங்களை தலைமை கழகத்திற்கு தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். அதனை தொடர்ந்து, 2026-ல் நடைபெற உள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலையொட்டிய பணிகளை விரைந்து ஆற்றுவது குறித்தும் விரிவாக ஆலோசனை வழங்கினார்.

## தங்கம் விலை

கடந்த 5 நாட்களில் தங்கம் விலை நிலவரம்:-
05.11.2025 ஒரு சவரன் ரூ.89,440
04.11.2025 ஒரு சவரன் ரூ.90,000
03.11.2025 ஒரு சவரன் ரூ.90,800
02.11.2025 ஒரு சவரன் ரூ.90,480
01.11.2025 ஒரு சவரன் ரூ.90,480
31.10.2025 ஒரு சவரன் ரூ.90,400




# பீகாரில் முதல் கட்ட சட்டசபை தேர்தலுக்கான ஓட்டுப்பதிவுக்கு ஏற்பாடுகள் தயார்

பாட்னா, நவ.06: பீகார் மாநில சட்டசபைக்கு (6-ம் தேதி மற்றும் 11-ந்தேதிகளில்) 2 கட்டங்க ளாக தேர்தல் நடக்கிறது. மொத்தம் உள்ள 243 தொகுதிகளில் முதல் கட்டமாக 121 தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்பட உள்ளது. இந்த 121 தொகுதிகளிலும் நேற்று மாலை 5 மணி முதல் அனல் பறந்த பிரசாரம் ஓய்ந்தது. நேற்று இறுதி நாளில் தேசிய ஜன நாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மத்திய மந்திரிகள் அமித்ஷா, ராஜ்நாத்சிங் அதிரடி பிரசாரம் மேற்கொண்டனர்.

பிரதமர் மோடி நேற்று செல்போன் செயலி மூலம் பா.ஜ.க. பெண் தொண்டர்களுடன் கலந்துரையாடினார். ஐக்கிய ஜனதா தளம் தலைவரும், முதல்-மந்திரியுமான நிதிஷ்குமாரும் தீவிர ஓட்டு வேட்டை நடத்தினார். இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ராகுல் காந்தி 3 பொதுக்கூட்டங்களில் பேசினார். அந்த கூட்ட ணியின் முதல்-மந்திரி வேட்பாளரான தேஜஸ்வி யாதவும் சூறாவளி பிரசாரம் செய்தார்.

பிரசாரம் ஓய்ந்த நிலையில் நேற்று மாலை 5 மணிக்கு பிறகு தொகுதிக்கு சம்பந்தம் இல்லாதவர்கள் வெளியேற்றப்பட்டனர். 121 தொகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. எல்லைகள் சீல் வைக்கப்பட்டு உள்ளன.

இதையடுத்து இன்று (புதன்கிழமை) காலை வாக்குச்சாவடி பணியாளர்கள் தேர்வு செய்யும் பணி நடந்தது. அதன் பிறகு அவர்களிடம் வாக்குப்பதிவுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. அந்த உபகரணங்களுடன்



வாக்குச்சாவடி பணியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு புறப்பட்டு சென்றனர். இன்று மாலை மாதிரி ஓட்டுப்பதிவு நடைபெற இருக்கிறது. இன்று இரவுக்குள் அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


முதல் கட்ட ஓட்டுப்பதிவு நடக்கும் 121 தொகுதிகளிலும் 1,314 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இந்தியா கூட்டணியின் முதல்-மந்திரி வேட்பாளரான தேஜஸ்வி யாதவ் ரகோபூர் தொகுதி, துணை முதல்-மந்திரி சவுத்ரி போட்டியிடும் தாரப்பூர் தொகுதிகளில் முதல் கட்ட ஓட்டுப்பதிவு நடைபெற உள்ளது. 18 மாவட்டங்களில் உள்ள 121 தொகுதிகளிலும் அதிக வாக்குகள் பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த 18 மாவட்டங்களிலும் 3.75 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.

இவர்கள் அச்சமின்றி வாக்களிப்பதற்காக 45,341 வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டு உள்ளன. அந்த வாக்குச்சாவடிகளை சுற்றி 3 அடுக்கு பாதுகாப்புகள் செய்யப்பட்டு உள்ளன. தேர்தல் அசம்பாவிதத்தை தடுப்பதற்கு 824 பறக்கும் படை உருவாக்கப்பட்டு உள்ளது. இதனால் பீகாரில் உச்சக்கட்ட பரபரப்பு நிலவு கிறது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS

| | |
|---|---|
| Public Notice | Loss of Share |
| Legal Notice | Merger |
| Tender Notice | Acquisition |
| Society Notice | AFR, UFR, etc. |

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com




# பௌர்ணமி சிறப்பு வழிபாடு



உடுமலைப்பேட்டை, நவ.6: உடுமலைப்பேட்டை ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஐப்பசி மாத பௌர்ணமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்களுடன், பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் தீபாராதனையும் நடைபெற்றது. நம் வாசவி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

# அருள்மிகு ஸ்ரீநாகம்மாள் திருக்கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா








திருவண்ணாமலை, நவ.6: திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் சி. கெங்கம்பட்டு ஊராட்சியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ நாகாம்பாள் திருக்கோயிலில் சர்வசாதகம்.. பிரம்மஸ்ரீ சிவ. கோவிந்தராஜன் அவர்கள், பிரம்மஸ்ரீ கோ. ஞானமணி சர்மா அவர்களால். மங்கல இசை,வேத பாராயணம், பாலாலாய தேவதா பூஜை, திருமுறை பாராயணம், எஜமானர் சங்கல்பம், ஸ்ரீவிக்னேஸ்வர பூஜை, புண்யா ஹாவாசனம், ரக்ஷா பந்தனம், கும்ப அலங்காரம், யாகசாலப்பிரவேசம் முதற் காலயாக பூஜை விசேஷ ஓமங்கள் பூர்ணாஹீதி, இரண்டாம் காலயாக பூஜை, விசேஷ ஹோமங்கள், மூன்றாம் கால யாக பூஜை , மூலாலய தேவதா ரக்ஷா பந்தனம், நான்காம் கால யாக பூஜை விசேஷ ஹோமம், ஸ்ரீவிக்னேஷ்வர பூஜை, தம்பதிகள் மகா சங்கல்பம் யாத்ரா தானம் தீபாரதனை காலை 6:00 மணிக்கு கடம் புறப்பாடு, 6:30 மணிக்கு விமான கும்பாபிஷேகம் 6:45 மணிக்கு ஸ்ரீ விநாயகர் ஸ்ரீவள்ளி தெய்வானை சமேத, சுப்பிரமணிய ஸ்ரீ துர்க்கை ஸ்ரீநாகாம்பாள் மூல ஆலய மஹா கும்பாபிஷேகம், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வானவேடிக்கையுடன், மின்விளக்குகளால் அலங்கரித்து வெகு சிறப்பாக நடைபெற்றது.

காலை 9 மணிக்கு மகா அபிஷேகம் மற்றும் மகா தீபாரதனை அன்னம் பாலிப்பு அன்னதானம் வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். ஸ்ரீ நாகம்மாளை வேண்டி அருள் பெற்றனர். கும்பாபிஷேக விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் கிராம பொதுமக்கள் மற்றும் குலதெய்வ வழிபாடு குடும்பத்தினர், N. வரதன் அவர்களால் வெகு சிறப்பாக நடைபெற்றது .

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# இம்மாத இறுதியில் உருவாகும் புயல் வடமாவட்டங்களுக்கு பாதிப்பா?





## டெல்டா வெதர்மேன்

சென்னை, நவ.6: வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் 16-ந்தேதி தொடங்கியது. தமிழ்நாட்டில் 2 சுற்று மழை பெய்த நிலையில், வங்கக்கடலில் உருவாகி ஆந்திராவில் கரையை கடந்த மோந்தா புயலால், ஒரு சிறிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. இருப்பினும் தமிழ்நாட்டில் வெப்பச்சலனம் காரணமாக நேற்று முன்தினம் முதல் மழை பெய்யத் தொடங்கி இருக்கிறது.

வருகிற 7-ந் தேதி வரை வட மாவட்டங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் பகலில் வெயில், மாலை அல்லது இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் மழை வெளுத்து வாங்க உள்ளது.

8, 9 மற்றும் 10-ந் தேதிகளில் தென் மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சிமலை மாவட்டங்களிலும் இடி மின்னலுடன் மழைக்கு வாய்ப்பு இருக்கிறது.

இந்த மாதம் இயல்பைவிட குறைவாக மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதே கருத்தை சில தனியார் வானிலை ஆய்வாளர்களும் குறிப்பிட்டிருந்தனர்.

ஆனால் டெல்டா வெதர்மேன் ஹேமச்சந்தர், நவம்பரில் (அதாவது இந்த மாதத்தில்) இயல்பைவிட அதிகமாக மழை பெய்யும் என்றும், முதல் பாதியில் வெயில் சுட்டெரித்தாலும், இரண்டாம் பாதியில் நல்ல மழைக்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் கூறி வருகிறார்.

வருகிற 12-ந் தேதிக்கு பிறகு கிழக்கு திசை காற்று தமிழக பகுதிகளுக்குள் வருகிறது. இதனைத்தொடர்ந்து 15-ந் தேதியில் இருந்து மீண்டும் பருவமழை தீவிரம் அடையும்.

அதனையடுத்து 4-வது வாரத்தில் அதாவது 23-ந் தேதி முதல் 30-ந் தேதிக்கு இடைபட்ட நாட்களில் புயலுக்கான வாய்ப்பு உள்ளதாகவும், இந்த புயலினால் வட மாவட்டங்களில் அதி கனமழை வரை பெய்து, மழைப்பாதிப்பை கொடுக்க வாய்ப்பு இருப்பதாகவும் ஹேமச்சந்தர் தெரிவித்தார்.

# ஈழத் தமிழர்களுக்கு வாக்குரிமை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- ராமதாஸ்



சென்னை, நவ.6: பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

இலங்கையிலிருந்து 1983ம் ஆண்டு ஈழத்தமிழர்கள் அங்கு நடந்த போர் சூழல் காரணமாக சொத்துகளை இழந்து தமிழ் மண்ணுக்கு லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் குடியேறினர்.

கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஈழத்தமிழர்கள் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தமிழகத்திலுள்ள 116 முகாம்களில் வசிக்கின்றனர். பல ஆண்டுகள் இவர்கள் இங்கு வாழ்ந்தாலும் இந்திய மக்களை போல சுதந்திரமாக வாழ முடியாத சூழல் இன்றும் நிலவுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது தொடங்கவுள்ள தீவிர வாக்காளர் திருத்த பணியின்போது தமிழ்நாட்டில் வசிக்கும் ஈழத் தமிழர்களுக்கு அவர்களின் விருப்பத்தின் பெயரில் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும்.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுப் பெற வேண்டும். மத்திய அரசும் ஈழத் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வாக்குரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வாக்குரிமை அளிக்கப்பட்டால் தான் ஈழத் தமிழர்களின் உரிமைக்காக அந்தந்த பகுதி மக்கள் பிரதிநிதிகள் பணியாற்றுவார்கள். ஆகவே இவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டியது அவசியம் ஆகும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வேலூரில் ரூ. 32 கோடி மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா திறப்பு!





வேலூர், நவ. 6: தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சென்னை, அரசு தலைமைச் செயலகத்தில் (05.11.2025) புதன்கிழமை காலை 10.15 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் வேலூரில் 32 கோடி ரூபாய் செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்காவினை திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, வேலூர் மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, வேலூர் ஒன்றியம், மேல்மொணவூர் அப்துல்லாபுரம் பகுதிகளில் உள்ள தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், வேலூரில் 32 கோடி ரூபாய் செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்கா திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் வேலூர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக திமுக வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு தொகுதி எம்எல்ஏ., ஏ.பி. நந்தகுமார் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து திறந்து வைத்தார்.

இதில் வேலூர் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ, மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா, வேலூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் அமுதா ஞானசேகரன், துணை மேயர் எம்..சுனில்குமார், ஒன்றிய செயலாளர் சி. எல். ஞானசேகரன், ஒன்றிய குழு பெருந்தலைவர் சி.பாஸ்கரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அமைப்பாளர் ஜே.திவாகர், கிளை செயலாளர் பச்சையப்பன் மற்றும் பல்டடவேறு அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# உதயநிதி என்ன தியாகியா?





## ஆதவ் அர்ஜுனா ஆவேசம்

செங்கல்பட்டு,நவ.6: செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் தவெக சிறப்பு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஆதவ் அர்ஜுனா உரை யாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

கரூர் சம்பவத்தை தொடர்ந்து, தவெக முடங்கிவிட்டது. மாவட்ட செயலாளர்கள் கைது செய்யப்பட்டனர். தவெக நிர்வாகிகள் ஓடி விட்டனர். பதுங்கிவிட்டனர் என்றெல்லாம் பேச்சு.

யார் ஓடியது. உங்கள் தந்தை முன்னாள் அமைச்சர் கருணாநிதி கைது செய்யும்போது யார் ஓடியது? சொந்த மகனே ஓடினார். திமுகவிற்கு வரலாறு தெரியுமா?

வரலாற்று பற்றி பேச ஆரம்பித்தால் தாங்க மாட்டீர்கள். தவெகவிற்கு வரலாறு தெரியாமல் இல்லை. எங்களுக்கு மக்கள் இயக்கமாக இருக்கவும் தெரியும், உங்களின் சூழ்ச்சிகளை உச்சநீதிமன்றத்தில் தூக்கி எறியவும் தெரியும்.

என்ன செய்துவிட்டோம்.. மக்கள் இயக்கமாக இருந்து மக்கள் கட்சி உருவாக்கி, மக்களிடம் போய் பிரசாரம் செய்தாம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன நிர்வாக மாற்றங்களை உருவாக்க முடியும் என்று பேசினோம்.

அரசியல்ல ஒருவரை அழிப்பதற்கு இப்படி குற்றச்சாட்டுகளா சொல்ல முடியும். மக்களின் ஒரே நம்பிக்கை தலைவர் விஜய்.

கரூர் சம்பவத்தில் ஒட்டுமொத்த காவல்துறையும் செயலிழந்து இருக்கிறது. பொதுக்கூட்டத்தில் எவ்வளவு மக்கள் கூட்டம் வரும் என்று அரசுக்கு தெரியாது என்றால் உள்துறை அமைச்சகமும், முதலமைச்சரும் ராஜினாமா செய்துவிட்டு செல்லுங்கள்.

கரூர் ஒரு மோசமான இடம் என்றும், அங்கு இருப்பவர் செந்தில் பாலாஜி ஒரு ரவுடி என்று தெரியாதா? என எங்களுக்கு அட்வைஸ் செய்கிறது திமுகவின் வாடகை வாய்கள். இன்னும் 6 மாதங்களில் தெரியும் யார் ரவுடி.. யார் அதிகாரம் பண்றது என்று தெரியும்.

புது அரசியலை உருவாக்க வந்திருக்கிறோம். ஊழல் குடும்பத்தை அழிக்க வந்திருக்கிறோம்.

கரூர் சம்பவத்தில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியில் ஆக்டிங்கை பார்த்திருப்பீர்கள். மறுநாள் காளையில் துபாயில் இருந்து ஒருவர் வந்தார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஏதோ தமிழ்நாட்டிற்கு தியாகம் செய்வதற்காக துபாய்க்கு உண்ணாவிரதம் செய்ய போனதுமாதிரியும், அங்கிருந்து மக்களுக்காக ஓடி வந்தது போலவும்.. வந்து ஒரு மணி நேரம் கூட மருத்துவமனையில் அவர் இல்லை.

நமக்க அதிகாரம் இருந்திருந்தால், பாதிக்கப்பட்ட மக்களுடன் கடைசி நிமிடம் வரை இருந்திருப்போம். ஒரு மணி நேரம் விசிட்டிற்கு பிறகு பேட்டியில், தவெக தலைவரை கேள்வி கேளுங்கள் என்கிறார்.

உங்கள் பொதுச் செயலாளர்கள் தூங்கி எழுந்திருக்க முடியாமல் இருக்கிறார்கள். அதற்கு எங்கள் பொதுச் செயலாளர்கள் எவ்வளவோ மேல்.

உங்கள் பொதுச் செயலாளரை (அமைச்சர் துரைமுருகன்) முதலில் எழுந்து ஒரு வாக்கிங் செய்ய சொல்லுங்கள். சட்டசபையில் உட்கார்ந்துக் கொண்டு கிண்டல், கேலி பண்ணிக் கொண்டு இருக்கிறார். அவை நாவடக்கம் இல்லை அவருக்கு.

எப்போது பார்த்தாலும் சட்டசைபயில் ஐயா உதயநிதி வாழ்க.. உதயநிதி வாழ்க என்கிறார். உதயநிதி என்ன தியாகியா? இதுபோன்று கேள்வி கேட்டால் போதும் என் மீது ஒரு எப்ஐஆர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 18 நாட்கள் தடைக்கு பிறகு கொடிவேரி தடுப்பணையில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி



கோபி, நவ.6: ஈரோடு மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தளமாக கோபி அருகே உள்ள கொடிவேரி தடுப்பணை ஆகும். ஈரோடு மட்டுமின்றி கோவை, சேலம், திருச்செங்கோடு, நாமக்கல் பல்வேறு பகுதிகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வருவது வழக்கம். விடுமுறை நாட்களில் ஆயிரக்கணக் கான சுற்றுலாப் பயணிகள் கொடிவேரி தடுப்பணைக்கு வருவது வழக்கம்.

தடுப்பணையில் குளித்து மகிழ்ந்து அங்கிருக்கும் பூங்கா பகுதியில் குடும்பத்தினருடன் உற்சாகமாக பொழுதை கழிப்பார்கள். மேலும் அணையின் வெளிப்பகுதியில் விற்கப்படும் பொரித்த மீன் புகழ்பெற்றதாகும்.

இந்நிலையில் பலத்த மழை காரணமாக பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன் எதிரொலியாக கடந்த அக்டோபர் மாதம் 18-ந்தேதி முதல் சுற்றுலாப் பயணிகள் கொடிவேரி அணையில் குளிக்க தடை விதிக்கப்பட்டது. தொடர்ந்து இரு கரைகளிலும் தொட்டபடி வெள்ள நீர் ஆர்ப்பரித்து சென்றதால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தொடர்ந்து தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம் அடைந்து வந்தனர்.

இந்நிலையில் மழைப் பொழிவு இல்லாததாலும் வெள்ளப்பெருக்குவடிந்ததாலும் கொடிவேரி தடுப்பணைக்கு நீர் வரத்து குறைந்தது. எனினும் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அருவியில் குளிக்கும் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் பிடித்து நிற்க வசதியாக பதிக்கப்பட்டிருந்த இரும்பு தடுப்புகள் சேதம் அடைந்திருந்தது.

இதனால் கடந்த இரண்டு நாட்களாக சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வந்தது. சேதமடைந்த தடுப்புகளை ஊழியர்கள் சீர் செய்தனர். சீரமைக்கும் பணிகள் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.

இதைத்தொடர்ந்து நேற்று காலை முதல் மீண்டும் கொடிவேரி தடுப்பணையில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 18 நாட்கள் தடைக்கு பிறகு சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப் பட்டதால் சுற்றுலாப் பயணிகள் உற்சாகம் அடைந்து உள்ளனர்.

# வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்



திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.சியாமளா தேவி தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 36 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

# தற்காலிக கொடிக்கம்பங்களுக்கு அனுமதி கட்டாயம்

## சென்னை மாநகராட்சி

சென்னை, நவ.6: தமிழகம் முழுவதும் பொது இடங்கள், மாநில, தேசிய நெடுஞ்சாலைகள், உள்ளாட்சிக்கு சொந்தமான இடங்களில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள், சாதி, மத அமைப்புகள் மற்றும் சங்கங்களின் கொடிக் கம்பங்களை 2025 ஏப்ரல் 28க்குள் அகற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்ற மதுரை கிளை 2025 ஜனவரியில் உத்தரவிட்டிருந்தது.

அதன் அடிப்படையில், கொடிக்கம்பங்கள் அமைப்பதற்கு குழுக்கள் அமைத்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்தது

அதேபோல், அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்பு களின் சார்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்காக கொடிக் கம்பங்கள் அமைக்கும் போது, சாலையில் தார்கள் மீதும், சாலை நடுவில் உள்ள செண்டர் மீடியன் பகுதிகளில் கொடிக்கம்பங்கள் அமைக்க கூடாது. மூன்று நாட்களுக்கு மேல் கொடிக்கம்பங்களை வைத்திருக்க கூடாது என்பன உள்ளிட்ட வழிகாட்டு விதிமுறைகளும் வகுக்கப்பட்டன. இந்நிலையில் சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது:

* சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிக கொடிக்கம்பங்கள் அமைக்க அனுமதி கட்டாயம் பெற வேண்டும்.

* அரசியல் கட்சிகளின் பிரசாரத்தின்போது தற்காலிக கொடிகள் கட்ட அனுமதி பெற வேண்டும்.

* தேர்தல் பிரசாரம், தர்ணா, பண்டிகை உள்ளிட்ட நிகழ்வுக்கு கொடிக்கம்பம், பேனர் வைக்க அனுமதி கட்டாயம் பெற வேண்டும்.

* அனுமதியின்றி நடப்படும் தற்காலிக கொடிக்கம்பம் எந்த முன்னறிவிப்பின்றி அகற்றப்படும்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

## வாக்காளர் பட்டியல்சிறப்புதீவிர திருத்தம் கனக்கீட்டு படிவம் வழங்கல்




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி தாமனூர், சின்னகரம் ஊராட்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணி இன்று வீடு வீடாகச் சென்று வாக்குச் சாவடி அலுவலர்கள் கணிக் கீட்டு படிவத்தை வழங்கினர்.

## ஈழத் தமிழர்களுக்கு வாக்குரிமை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- ராமதாஸ்



**சென்னை, நவ.5:** பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

இலங்கையிலிருந்து 1983-ம் ஆண்டு ஈழத்தமிழர்கள் அங்கு நடந்த போர் சூழல் காரணமாக சொத்துகளை இழந்து தமிழ் மண்ணுக்கு லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் குடியேறினர்.

கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஈழத்தமிழர்கள் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தமிழகத்திலுள்ள 116 முகாம்களில் வசிக்கின்றனர். பல ஆண்டுகள் இவர்கள் இங்கு வாழ்ந்தாலும் இந்திய மக்களை போல சுதந்திரமாக வாழ முடியாத சூழல் இன்றும் நிலவுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது தொடங்கவுள்ள தீவிர வாக்காளர் திருத்த பணியின்போது தமிழ்நாட்டில் வசிக்கும் ஈழத் தமிழர்களுக்கு அவர்களின் விருப்பத்தின் பெயரில் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும்.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுப் பெற வேண்டும்.

மத்திய அரசும் ஈழத் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வாக்குரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வாக்குரிமை அளிக்கப்பட்டால் தான் ஈழத் தமிழர்களின் உரிமைக்காக அந்தந்த பகுதி மக்கள் பிரதிநிதிகள் பணியாற்றுவார்கள். ஆகவே இவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டியது அவசியம் ஆகும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## பவுர்ணமி நாளான இன்று திருச்செந்தூர் கடல் 100 அடி உள்வாங்கியது

**திருச்செந்தூர், நவ.5:** திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கடற்கரையில் அமைந்துள்ளது. இந்த கடலானது புனித தீர்த்தமாக கருதப்படுகிறது.

இதனால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் கடலில் புனித நீராடிய பின்னரே சுவாமி தரிசனம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த நிலையில் கடலானது அமாவாசை, பவுர்ணமி போன்ற நாட்களில் உள்வாங்கி காணப்படுவதும், சில மணி நேரங்களில் வெளியே வருவதும் வழக்கமாக இருந்து வருகிறது. இன்று பவுர்ணமி என்பதால் கடல் சுமார் 100 அடி உள்வாங்கி காணப்பட்டது. இதனால் பாசிபடிந்த பாறைகள் வெளியே தெரிந்தது.

மேலும் கடல் அலைகள் இன்றி குளம் போல் காட்சி அளித்தது. பக்தர்கள் கடல் உள்வாங்கி காணப்பட்டதை கண்டு செல்பி எடுத்து சென்றனர். ஆனாலும் பக்தர்கள் வழக்கம் போல் புனித நீராடி வருகின்றனர்.




## செஞ்சிலுவைச் சங்க முகாம்




பள்ளிக்கல்வித் துறை சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான செஞ்சிலுவைச் சங்க முகாம் திருச்சி இந்திரா கணேசன் கல்லூரியில் மூன்று நாள் வெகு சிறப்பாக நடைபெற்றது . இதில் மெட்ரிக் பள்ளிகளுக்கு இடையேயான மாவட்ட அளவிலான போட்டிகளில் திருச்சி எக்விடாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மௌன மொழி நாடகத்தில் மாவட்ட அளவில் மூன்றாம் பரிசினை வென்றனர். அவர்களைப் பாராட்டி முகாமின் சிறப்பு விருந்தினர் சான்றிதழ்களை வழங்கினார்.

## ஐப்பசி மாதம் அன்னாபிஷேகம் சிறப்பு வழிபாடு....



கிரிவலப் பாதையில் அமைந்திருக்கும் திருநேர் அண்ணாமலையார் ஐப்பசி மாத பௌர்ணமியை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் ரத்னா குமார் ஐயர் அவர்களால் அன்னாபிஷேகத்துடன் காய்கனி,பழங்கள் மாலையுடன் ருத்ராட்ச மாலையுடன், வண்ணமலர் மாலைகளுடன் பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மஹாதீபாரதனை நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் அன்னாபிஷேகத்தில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். வெகு சிறப்பாக நடைபெற்றது அனைவருக்கும் அன்னப்பிரசாதம் வழங்கப்பட்டது. குழந்தை இல்லாதவர்கள் அன்னம் பிரசாதம் சாப்பிட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று ஐதீகம்.

## தற்காலிக கொடிக்கம்பங்களுக்கு அனுமதி கட்டாயம் - சென்னை மாநகராட்சி



**சென்னை, நவ.5:** தமிழகம் முழுவதும் பொது இடங்கள், மாநில, தேசிய நெடுஞ்சாலைகள், உள்ளாட்சிக்கு சொந்தமான இடங்களில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள், சாதி, மத அமைப்புகள் மற்றும் சங்கங்களின் கொடிக் கம்பங்களை 2025 ஏப்ரல் 28க்குள் அகற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்ற மதுரை கிளை 2025 ஜனவரியில் உத்தரவிட்டிருந்தது. அதன் அடிப்படையில், கொடிக்கம்பங்கள் அமைப்பதற்கு குழுக்கள் அமைத்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்தது.

அதேபோல், அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் சார்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்காக கொடிக்கம்பங்கள் அமைக்கும் போது, சாலையில் தார்கள் மீதும், சாலை நடுவில் உள்ள செண்டர் மீடியன் பகுதிகளில் கொடிக்கம்பங்கள் அமைக்க கூடாது. மூன்று நாட்களுக்கு மேல் கொடிக்கம்பங்களை வைத்திருக்க கூடாது என்பன உள்ளிட்ட வழிகாட்டு விதிமுறைகளும் வகுக்கப்பட்டன.

இந்நிலையில் சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

* சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிக கொடிக்கம்பங்கள் அமைக்க அனுமதி கட்டாயம் பெற வேண்டும்.

* அரசியல் கட்சிகளின் பிரசாரத்தின்போது தற்காலிக கொடிகள் கட்ட அனுமதி பெற வேண்டும்.

*தேர்தல் பிரசாரம், தர்ணா, பண்டிகை உள்ளிட்ட நிகழ்வுக்கு கொடிக்கம்பம், பேனர் வைக்க அனுமதி கட்டாயம் பெற வேண்டும்.

*அனுமதியின்றி நடப்படும் தற்காலிக கொடிக்கம்பம் எந்த முன்னறிவிப்பின்றி அகற்றப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பரந்தூர் புதிய விமான நிலைய திட்டம் - கையகப்படுத்தப்பட்ட 1,000 ஏக்கர் நிலம்

**சென்னை, நவ.5:** சென்னையின் 2-வது புதிய விமான நிலையம் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் அமைய உள்ளது. இதற்கான அறிவிப்புகள் வெளியாகி நிலங்களை கையகப்படுத்தும் பணி தொடங்கி நடந்து வருகிறது. புதிய விமான நிலைய திட்டத்திற்காக பரந்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள 13 கிராமங்களில் இருந்து 5,183 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது.

இதற்கு பரந்தூர், ஏகனாபுரம் உள்ளிட்ட கிராமமக்கள் எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சியினர் ஆதரவு தெரிவித்து உள்ளனர். எனினும் புதிய விமான நிலையத்திற்கான அடுத்த கட்ட பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

நில எடுப்புக்கு ஒரு தரப்பு எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையில், மற்றொரு தரப்பினர் தங்களது நிலங்களை விமான நிலைய திட்டத்திற்கு வழங்கி வருகின்றனர். கடந்த ஜூலை 9-ந்தேதி பரந்தூர், நெல்வாய், பொடவூர், அக்கமாபுரம், வளத்தூர் ஆகிய ஐந்து கிராமங்களைச் சேர்ந்த 19 பேர் தங்கள் நிலங்களை, முதன்முதலாக விமான நிலைய திட்டத்திற்கு வழங்கினார்கள்.

கடந்த செப்டம்பர் மாத வரையிலான கணக்கீட்டின்படி, 12 கிராமங்களைச் சேர்ந்த 441 பேர் தங்களது 566 ஏக்கர் நிலங்களை வழங்கிவிட்டதாக வருவாய் துறையினர் தெரிவித்து உள்ளனர்.

இந்நிலையில் அக்டோபர் மாதம் இறுதியிலான கணக்கெடுப்பின்படி, 1,000 ஏக்கர் நிலங்கள், கையகபடுத்தும் பணி முடிந்துவிட்டதாக வருவாய் துறையினர் தெரிவித்து உள்ளனர்.

இதற்காக இழப்பீடு தொகையாக, 400 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. மீதமுள்ள நிலங்களையும் கையகப்படுத்த விரைவாக நில எடுப்பு பணிகள் நடப்பதாக தெரிவித்துள்ளனர்.

விமான நிலையத்திற்கு தேவையான மீதமுள்ள நிலம் கையகப்படுத்தும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.





**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து.** - குறள் 125

అందఱికిని మంచి యణకువగా నున్న
నున్న వారి కధిక వన్నెఁదెచ్చు - కురళ్ 125

संयम उत्तम वस्तु है, जन के लिये अशेष ।
वह भी धनिकों में रहे, तो वह धन सुविशेष ॥ - कुराल 125

Ellaarkkum Nandraam Panidhal Avarullum
Selvarkke Selvam Thakaiththu - Kural 125

## ஐப்பசி மாத அன்னாபிஷேக சிறப்பு வழிபாடு.....




**விழுப்புரம், நவ.5:** அரகண்டநல்லூரில் அமைந்திருக்கும் அதுல்யநாதேசுவரர் (ஒப்பில்லா மணீசுவரர் ) ஆலயத்தில் அமைந்திருக்கும் ஞானசம்மந்தர் பாதத்தில் நேரில் இருந்து பார்த்தால் திருவண்ணாமலை மலை தெரியும் கொடி மரத்தின் கீழ் நின்று வணங்கி ஆலயம் மூன்று சுற்று சுற்றி வந்தால் திருவண்ணாமலை அண்ணாமலையார் கிரிவலம் வந்ததற்கு நிகர் ஆகும்.

அதுல்ய நாதேசுவரர் மிகச் சிறப்பு வாய்ந்த கோவில் அதுல்யநாதேசுவரர் இன்று ஐப்பசி மாத பௌர்ணமியை முன்னிட்டு அன்னாபிஷேகம் அனைத்து விதமான காய்கனிகளுடன், பழங்கள் மாலையாக அணிவித்து வெகு சிறப்பாக அன்னாபிஷேகம் நடைபெற்றது.ஏராளமான பக்தர்கள் அன்னாபிஷேகத்தில் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார்கள்.


அனைவருக்கும் பிரசாதமும், அன்னம் வழங்கப்பட்டது. குழந்தை இல்லாதவர்கள் அன்னாபிஷேகத்தில் அன்னம் வாங்கி சாப்பிட்டால் குழந்தை பேறு கிடைக்கும் என்பது ஐதீகம்.

## அகில இந்திய தமிழ் மாமன்ற உறுப்பினர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் அடையாள அட்டை வழங்குதல்..

**மதுரை, நவ.4:** டாக்டர் சூர்யா வெ.சுப்ரமணியன் அவர்களின் 56 வது அகவைதின பாராட்டு விழா.! பெங்களூரு கவிஞர். வே.கல்யாண்குமார் எழுதிய மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கைவரலாற்றுகாவியமான சத்திய வெளிச்சம் நூல் வெளியீட்டு விழா.!

இதோ அன்பான அழைப்பிதழ்.. அனைவரும் வருக.! காந்திய பக்தர்களே வருக! கவிதைத் தேன் பருக! அழைத்து மகிழ்வது.. காந்தியவாதி மதுரை ம. கருப்பையா காந்தி நிறுவனர்.


அகில இந்திய தமிழ் மாமன்ற அறக்கட்டளை! திரு ந. சுப்ரமணியன் எம்.ஏ., திருச்சிராப்பள்ளி சர்வோதய சங்க செயலாளர். திரு.Y.G. நாகராஜ் நிறுவனர் தலைவர் ஜனநாயக விழிப்புணர்வு இயக்கம் பெங்களூரு. டாக்டர்.சூர்யா. வெ.சுப்ரமணியன். நிறுவனர். சூர்யா நினைவு அறக்கட்டளை மற்றும் சூர்யா பாராமெடிக்கல் கல்லூரி வையம்பட்டி.



சிதம்பரம் அருகே பிச்சாவரத்தில் சதுப்புநிலக் காடுகள் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உள்ளன. இக்காடுகளில் உப்பங்கழிகளும், அடர்த்தியான மாங்குரோவ் (சுரபுன்னை) காடுகளும் உள்ளன.இங்கு உள்ள காடுகளில் அரிய வகை பொன்நிற குள்ள நரிகள் அதிகம் உள்ளதை வனத் துறையினர் கண்டறிந்துள்ளனர்.இவைகள் மீன், நண்டு, இறால் போன்றவற்றை உண்டு வாழ்கின்றன. குள்ள நரிகள் அலையாத்திக் காடுகளின் தூய்மைப் பணியாளராக கருதப்படுகின்றன.

# கவிதை அரங்கம்!





வாழ்க்கை புத்தகம்
படித்தால்
அறிவை வளர்க்கலாம்
என்று
எண்ணினேன் கடைசியில்
வறுமையை படித்தேன்
வாழ்க்கையே புத்தகமாய்
வெளிவந்தது

பிடித்து விட்டால்
மறக்க தெரியாமல்
குழந்தை போல
அடம்பிடித்து நிற்பது
தான் மனதின் குணம்


எதிர்பார்ப்பின் ஆர்வம்
அது நிறைவேறும்
போது இருப்பதில்லை

கிடைத்த வாழ்க்கையை
ரசித்து வாழத் தெரிந்தால்
அந்த வாழ்வுக்குப் பெயர்
தான் அழகான வாழ்க்கை

திமிரும் பிடிவாதமும்
நேர்மை என்கிற
நதியின் இரு கரைகள்

ஒருவன் தன் பணத்தால்
நாயை வாங்கிவிட முடியும்
ஆனால் அன்பு ஒன்றினால்
தான் அதன் வாலை
ஆட்ட வைக்க முடியும்

## கடந்தது கடந்ததே...



கடந்தது கடந்ததே...
வருங்காலம் இன்னும் பிறக்கவே இல்லை...
அவை இரண்டும் உங்கள் உள்ளத்தை தொட முடியாது.
நீங்கள் உணரும் வலி —
கடந்த நினைவின் நிழலும்,
வருங்காலத்தின் கற்பனையும் தான்.
நேற்றை நினைத்து மனம் கலங்குகிறது,
நாளையை நினைத்து மனம் பயப்படுகிறது...
ஆனால் உண்மை ஒன்றுதான் —
இப்போது நடக்கும் இந்த நொடிதான்
உங்கள் கையில் இருக்கும் வாழ்க்கை.
அதை உணரத் தொடங்குங்கள்...
அமைதி உங்களுக்குள் தானே உள்ளது.
வாழ்க வளமுடன்,
என்றும் அன்புடன்,

நன்றி - ஆனந்தி

# ரமணி



ரமணி வருவதற்குள் சமையலை முடித்து விட வேண்டும் என்ற பதட்டம் பாரதிக்கு.

ரமணிக்கு வங்கியில் மேனேஜர் வேலை. வேலை முடித்து விட்டு வீட்டுக்கு வரும் நேரம் நெருங்க நெருங்க பாரதியின் மனதில் ஒரு பயம் ஏற்பட்டது. என்ன செய்வது ரமணியின் போஸ்ட் அப்படி.

ரமணிக்கு வயது என்ன இருபதுக்குள்தான் இருக்கும். திறமையை பார்த்த நிர்வாகம் அடிக்கடி கொடுத்த பிரமோஷனால் இன்று மேனேஜர் என்ற நிலைமையை இவ்வளவு சிறிய வயதிலேயே எட்ட முடிந்தது.

பாரதி கொஞ்சம் டீவி பைத்தியம். சீரியல் பார்க்க அமர்ந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

வீட்டுக்குள் நுழைந்தவுனே சாப்பாடு ரெடியாகாதது தெரிந்தால் ரமணிக்கு கோபம் வந்து விடுமே என்ற நினைப்பே பாரதிக்கு மேலும் பதட்டத்தை உருவாக்கியது.

அதற்க்கேற்றார் போல் செல் சிணுங்க ஆரம்பித்தது. டிஸ்பிளேவில் ரமணி காலிங் என்று மின்ன என்ன செய்வதென்றே தெரியவில்லை பாரதிக்கு. ஆன்சர் பட்டனை அழுத்த நான் தான் ரமணி பேசறேன் நான் வருவதற்கு இன்றைக்கு கொஞ்சம் நேரமாகும், நீ சாப்பிட்டு படு என ரமணி கூற பாரதிக்கு அப்போதுதான் பட படப்பு குறைந்தது.

என்ன செய்வது பாரதிக்கு வேலை இல்லை. ரமணியின் சம்பளத்தை வைத்துதான் குடும்பமே நடத்த முடிகிறது.

சரி மனைவி ரமணி வர இன்னும் நேரம் இருக்கிறது. சிக்கிரம் சமையல் வேலையே முடித்துவீட்டு நாளை நடைபெறும் இண்டர்வியூவிலாவது தனக்கு நல்ல வேலை கிடைக்க வேண்டும் என கடவுளை வேண்டிக் கொண்டான் கணவன் பாரதி விவேகானந்தன்.

**வெ.நாராயணன்**
லால்குடி

# குறை

தெத்துப்பட்டி என்ற ஊரில் சாந்தனு என்ற இளைஞன் இருந்தான். அவனுக்கு நகரத்தில் வேலை கிடைத்தது. அங்கேயே தங்கி வேலை பார்த்து வந்தான். அவனுக்குத் திருமணம் நடந்தது. தன் மனைவியை நகரத்திற்கு அழைத்து வந்து அவளுடன் குடும்பம் நடத்தினான்.

முதல்நாள் வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பினான். ""இங்கே யாருமே சரி இல்லை. எல்லாரும் நம்மைப் பார்த்து பொறாமைப்படுகின்றனர். என்னைப் பார்த்தாலே முகத்தைத் திருப்பிக் கொள்கின்றனர். யாரும் என்னுடன் பேசுவது இல்லை!" என்று குறை சொன்னாள்.

""நீ இப்போதுதான் இங்கே வந்திருக்கிறாய். உன்னுடன் பழக அவர்கள் தயக்கம் காட்டியிருக்கலாம். நீ அதைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பாய். நாளாக நாளாக எல்லாம் சரியாகி விடும். சிறிது பொறுமையாக இரு!" என்றான் அவன்.
அடுத்த நாள் அவன் வேலை முடித்து வீடு திரும்பினான். ""அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் நம்மைக் குறை சொல்லிக் கொண்டிருந்தனர். நான் வருவதைப் பார்த்ததும் பேசுவதை நிறுத்தி விட்டனர். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை!" என்றாள் அவள்.

இப்படியே அவள் நாள்தோறும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப் பற்றி குறை சொன்னாள். ""இனி நம்மால் இங்கே குடி இருக்க முடியாது. வேறு இடம் பாருங்கள்," என்று நச்சரிக்கத் தொடங்கினாள். "நாம் அதிகம் பழகாததால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் குறை தெரியாமல் போயிற்றா? மனைவி சொல்வது போல அவர்கள் பொல்லாதவர்கள்தானா?' என்று குழம்பினான் அவன்.

அப்போது பெற்றோர்களிடம் இருந்து அவனுக்கு ஒரு மடல் வந்தது. அதில், "ஊர்த் திருவிழா ஒருவாரம் நிகழ உள்ளது. நீ குடும்பத்துடன் வர வேண்டும்' என்று எழுதி இருந்தது.

மனைவியிடம் அந்த மடலைக் காட்டினான். ""என் பெற்றோர்கள் ஊர்த் திருவிழாவிற்கு நம்மை அழைத்திருக்கின்றனர். எனக்கு அலுவலகத்தில் நிறைய வேலை உள்ளது. என்னால் வர முடியாது. நீ மட்டும் சென்று திருவிழா முடியும் வரை இருந்துவிட்டு வா!" என்றான்.

அவளும் அவன் சொன்னது போலவே ஊருக்குச் சென்றாள். அங்கே ஒருவாரம் தங்கிவிட்டு வந்தாள்.

""பயணம் எப்படி இருந்தது? என் வீட்டில் உள்ளவர்கள் உன்னை நன்றாகக் கவனித்துக் கொண்டார்களா?" என்று கேட்டான் அவன்.

""அங்கே மாடு மேய்க்கும் சுப்பனே என்னை எதிரியைப் போலப் பார்த்தான். மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இனி என்னை அங்கே போகச் சொல்லாதீர்கள்!" என்று சலித்துக் கொண்டாள் அவள். "சுப்பன் மாடுகளை மேய்ப்பதற்காக அதிகாலையில் வீட்டைவிட்டுச் செல்வான். இரவில்தான் வீடு திரும்புவான். பகலில் அவனை பார்ப்பதே அரிது. இரவிலும் எப்போதாவதுதான் கண்ணில் படுவான். அவன் இவளை எதிரி போலப் பார்த்ததாகச் சொல்கிறாள்.

"யாரைக் கண்டாலும் அவர்கள் தன்னை பார்ப்பதாகவும், தன்னைப் பற்றிதான் பேசுவதாகவும் நினைப்பதுடன், அடுத்தவர்களை குறை கூறும் இயல்பு இவளுக்கு அதிகம் உண்டு. நல்ல வேளை, இவள் பேச்சை நம்பி அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் சண்டை போடாமல் இருந்தேனே. இந்தக் கெட்ட பழக்கத்தை இவள் விடும்படி செய்ய வேண்டும். அதற்கான முயற்சியில் இறங்க வேண்டும்!' என்ற முடிவுக்கு வந்தான் சாந்தனு.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!





*மனைவி : "உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல 'ஐ லவ் யூ' சொன்னப்ப, நான் திக்கு முக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்"*

*கணவன் : "பின்ன ஞாபகம் இருக்காதா, அந்த 1 மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே நான் மகிழ்ச்சியா இருந்தேன்"*

# ரமணி

# தினம் ஒரு சமையல்




## தினை அரிசி பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

ரவா -1 கிலோ
சர்க்கரை-1 கிலோ
பெரியதேங்காய்-2
பாதாம் -1 கப்
ஏலக்காய்-20
முந்திரி -அரைகப்
கிராம்பு -4
பாக்கெட்பால் -1லிட்டர்
நெய்-அரை கப்

**செய்முறை:**



முதலில் தேவையான எல்லாம் ரெடி பண்ணிக் கொள்ளவும்.தேங்காய் துருவிக்கொள்ளவும். 3ஸ்பூன்நெய்விட்டு ரவையை 4 பாகமாக பிரித்து தனி தனியாக வறுக்கவும். அப்படிகொஞ்சம்கொஞ்சமாக வறுத்தால் தான்.ஒன்று போல் வறுபடும்.
நிதானமாக வறுக்கவும்.வறுத்ததும் இப்படி இருக்கும்.
1லிட்டர் பாலை காய்ச்சி ரெடி பண்ணிக்கொள்ளவும்.
பாதாம், முந்திரி பருப்பை சின்னதாககட் பண்ணிக் கொள்ளவும். வேறுவாணலியில் நெய்விடாமல்கிராம்பு,ஏலக்காய்,ரவை -2ஸ்பூன்,பாதி பாதாம் வறுத்துக்கொள்ளவும்.இது தான் ஸ்பெசல் பாதாம் பொடி.
வறுத்த இவைகளை தனியாக அரைத்துக் கொள்ளவும்.1 கிலோ ரவை எல்லாம் வறுத்தாச்சு.
கட்பண்ணியபாதாம்,முந்திரி பருப்புகளை நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.அதே வாணலியில் தேங்காயை வறுக்கவும். தேங்காயையும் 2 ஆகபிரித்து கொஞ்சம்கொஞ்சமாக வறுக்கவும் இப்படிவறுபட்டதும் கரண்டியில்இருந்து விழ வேண்டும். தண்ணீர்பதம் முற்றிலுமாக இருக்கக்கூடாது. வறுக்காததேங்காய்துருவல்,வறுத்த தேங்காய் துருவல் இப்படி இருக்கும்.
பின்வறுத்த ரவை,வறுத்த தேங்காய்துருவல்,சர்க்கரை,அரைத்த பாதாம்,ஏலக்காய் பொடி,காய்ச்சிய பால்எல்லாம் எடுத்து ரெடியாக வைத்துக்கொள்ளவும்.
பின் பாலைசேர்த்து அனைத்தையும் கலந்து ஒரு அரைமணி நேரம் வைத்து விடவும்.
கலவையில் பால் சேர்த்ததால் சர்க்கரை கசிந்து சூப்பராக லட்டு போல்உருட்டவரும்.ரவா பாதாம் லட்டு ரெடி. பாதாம்பொடிசேர்ப்பதால் ருசி நன்றாக இருக்கும்.பால் சேர்ப்பதால்3நாட்கள்வெளியே வைக்கலாம்.பிரிட்ஜில் 10 நாட்கள் வைத்து சாப்பிடலாம்.பால் சேர்ப்பதால் மெல்லமெல்ல ருசிஅபாரமாகஇருக்கும்.சாப்டாக இருக்கும்.

## சதகுப்பை நன்மைகள்



பார்ப்பதற்கு சீரக செடியை போல் தோற்றமளிக்கும் சதகுப்பை மருத்துவ குணங்கள் நிறைந்த செடி ஆகும். இதற்கு சோயிக்கீரை, மதுரிகை என பெயர்களும் உண்டு. மாதவிடாய் தோன்றும் காலங்களில் ரத்தப்போக்கு அதிகமாக இருக்கும். அந்த சமயங்களில், சதகுப்பை, கருஞ்சீரகம், மரமஞ்சள் வகைக்கு சம அளவாக எடுத்து இடித்துப் பொடியாக்கி சம அளவு பனைவெல்லம் சேர்த்து அரைத்து 5 கிராம் காலை, மாலை இரு வேளை சாப்பிட்டு சிறிது நேரம் கழித்து சோம்புக் குடிநீர் குடித்து வர, மாதவிடாய் கோளாறு, அதிகமான ரத்தபோக்கு நீங்கி கருப்பை பலப்படும்.

சதகுப்பை சூரணம் ஒரு கிராம் எடுத்து சிறிது சர்க்கரை சேர்த்து சாப்பிட்டு வர நுரையீரலிலுள்ள மாசுக்கள் நீங்கும். தூக்கமின்மையால் அவதிப்படுபவர்கள் கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டிய மூலிகை சதகுப்பை.

சதகுப்பை இலையை விளக்கெண்ணெய் தடவி வதக்கி கட்டிகளுக்கும், வீக்கங்களுக்கும் வைத்துக் கட்டி வர சீக்கிரம் பழுத்து உடையும்.

பிரசவித்த பிறகு தாய்ப்பால் சுரப்புக் குறைவாக இருந்தால் சதகுப்பை, அமுக்குரா சூரணம் இரண்டையும் கலந்து சிறிது வெல்லம் சேர்த்து சாப்பிட்டால் தாய்ப்பால் அதிகரிக்கும்.

சதகுப்பை இலையை நிழலில் உலர்த்திப் பொடி செய்து 15 கிராம் எடுத்து சிறிது சர்க்கரையுடன் கலந்து 3 வேளை சாப்பிட்டு வர சைனஸ், தலைவலி, காது வலி, பசி மந்தம், மூக்கு நீர்ப் பாய்தல் முதலியவை குணமாகும்.

காது மந்தம் உள்ளவர்கள் சரியான முறையில் சதகுப்பை இலை மற்றும் சதகுப்பை விதைகளைப் பயன்படுத்தினால் நிவாரணம் கிடைக்கும். சதகுப்பை வாய் துர்நாற்றத்தைப் போக்கும். சுவை மண்டல கோளாறுகளையும் குணமாக்க வல்லது சதகுப்பை.

# ஆண்பாவம் பொல்லாதது 4 நாட்களில் உலகளவில் செய்துள்ள வசூல்.. பாக்ஸ் ஆபிஸ் ரிப்போர்ட்



கடந்த வாரம் தமிழ் சினிமாவில் இருந்து வெளிவந்த படங்களில் ஒன்று ஆண்பாவம் பொல்லாதது. ரியோ ராஜ் நடிப்பில் உருவான இப்படத்தை அறிமுக இயக்குநர் கலையரசன் இயக்கியிருந்தார்.

ஜோ படத்தில் ரியோ ராஜ் உடன் இணைந்து நடித்திருந்த நடிகை மாளவிகா மனோஜ், இப்படத்தில் இரண்டாவது முறையாக ரியோவுடன் கைகோர்த்திருந்தார். மேலும் விக்னேஷ்காந்த், ஷீலா ராஜ்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர்.

வசூல்

மக்கள் மத்தியில் இப்படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த நிலையில், நான்கு நாட்களை வெற்றிகரமாக கடந்திருக்கும் இப்படம் இதுவரை உலகளவில் செய்த வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, நான்கு நாட்களில் உலகளவில் ரூ. 5.1 கோடி வசூல் செய்து பாக்ஸ் ஆபிஸில் ஹிட்டாகியுள்ளது.






நடிகை அதுல்யா ரவி பச்சை நிற உடையில் கிளாமர் போஸ் கொடுத்த ஸ்டில்கள்.

லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் இதோ.

# கல்யாண வீட்டில் நடந்த சோகம்.. பெரிய சிக்கலில் நடிகர் துல்கர் சல்மான்! என்ன ஆனது?



தென்னிந்திய சினிமாவில் முன்னணி ஹீரோக்களில் ஒருவர் துல்கர் சல்மான். மலையாளத்தில் அறிமுகமாகி இருந்தாலும், தமிழ், தெலுங்கு என தொடர்ந்து மற்ற மொழிகளிலும் நடித்து வருகிறார்.

இவர் நடிப்பில் கடைசியாக வெளிவந்து மாபெரும் அளவில் வெற்றியடைந்துள்ள திரைப்படம் லக்கி பாஸ்கர். தற்போது, இவர் தெலுங்கு இயக்குநர் பவன் சாதினேனி இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கிறார்.

இந்த படத்திற்கு 'ஆகாசமோல் ஓகா தாரா' என பெயரிடப்பட்டுள்ளது. துல்கர் கேரளாவை சேர்ந்த ஒரு பிரியாணி அரசி நிறுவனத்திற்கு விளம்பர தூதராக உள்ளார்.

இந்நிலையில், பத்தனம்திட்டா மாவட்டத்தை சேர்ந்த ஒரு கேட்டரிங் நிறுவனம் சார்பில் நுகர்வோர் ஆணையத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அதாவது, கடந்த சில தினங்களுக்கு முன் ஒரு திருமண நிகழ்ச்சிக்காக பிரசித்தி பெற்ற ஒரு நிறுவனத்தின் பிரியாணி அரிசி வாங்கப்பட்டுள்ளது.

அதில் சமைத்த பிரியாணியை சாப்பிட்ட பலருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இதை தொடர்ந்து இந்த அரிசி நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் விளம்பர தூதரான நடிகர் துல்கர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அரிசி நிறுவனத்தின் உரிமையாளர், நடிகர் துல்கர் சல்மான் ஆகியோர் நேரில் ஆஜராக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com